**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி**

முன்னிலை: திரு. அ.செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் சனிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.12/2019</u>

1. கோவிந்தராஜ், த/பெ முத்து கவுண்டர், இந்து, விவசாயம், வயது சுமார் 45,

2. சக்திவேல், த/பெ ஆரிமுத்து கவுண்டர், இந்து, விவசாயம்,
வயது சுமார் 52,

3. சீனிவாசன், த/பெ ஆரிமுத்து கவுண்டர், இந்து, விவசாயம்,
வயது சுமார் 59,

வாதிகள் வசிப்பு பூசாரிக்கொட்டாய் கிராமம், அங்கம்பட்டி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம். ... வாதிகள்

(எதிராக)

1. வி. சக்திவேல், த/பெ வேலாயுதம், இந்து, விவசாயம், வயது சுமார் 33,
2. வேலாயுதம், த/பெ கோபால், இந்து, விவசாயம், வயது சுமார் 60,

பிரதிவாதிகள் வசிப்பு மலையாண்டஹள்ளி கிராமம், அங்கம்பட்டி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

... பிரதிவாதிகள்

வழக்குத் தேதி: 08.02.2019

வழக்குமூலம் :
06.07.1920, 02.02.1956, 09.02.1956,
17.04.2013, 24.04.2009, 10.01.2019.

தாவா மதிப்பு ரூ. 6,000 /-

தமிழ்நாடு நீதிமன்ற கட்டண
சட்டப்பிரிவு 25(d)-ன் படி
செலுத்தப்பட்ட நீதிமன்ற
கட்டணம் ரூ.150/-
த.நீ.க.ச பிரிவு 27(c)-ன் படி
செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்
ரூ.30/-, மொத்தம் ரூ.180/-

வாதிகள் இவ்வழக்கை வழக்குச் சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதி பெயரிலான 24.4.2009ம் தேதியிட்ட ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண். 1043/2009-ன் தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்யவும், வழக்கு 1, 2 இனச் சொத்துக்களில் வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்திற்கும் அனுபவத்திற்கும் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கு 08.02.2019-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் 16.02.2021-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M . ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A. சந்திரன் மற்றும் திரு. G. கேசவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததாலும் அவர்களை தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், அது சமயம் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதிகள் தரப்பு வாதங்களை கேட்டும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**தீர்ப்பாணை**

1. வாதிகளின் வழக்குச் சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதி பெயரிலான 24.4.2009ம் தேதியிட்ட ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண். 1043/2009-ன் தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. வழக்கு 1, 2ம் இன சொத்துக்களில் வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்திற்கும் அனுபவத்திற்கும் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

3. வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலவுத் தொகையாக ரூ. 615 /- செலுத்தவேண்டும் என தீர்ப்பாணையிடப்படுகிறது.

( வாதிகள் தரப்பில் செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்து விவரம்

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், கெண்டிகாம்பட்டி வருவாய் கிராமம்,

1. சர்வே எண்.644/1 பு.ஹெ.0.04.0 தீர்வை ரூ.0.10
2. சர்வே எண்.644/2 பு.ஹெ.1.42.50 தீர்வை ரூ.3.05
3. சர்வே எண்.644/3 பு.ஹெ.0.05.0 தீர்வை ரூ.3.05
4. சர்வே எண்.644/4 பு.ஹெ.0.02.0 தீர்வை ரூ.0.06

## செலவு விவரப்பட்டியல்

| | வாதிகள் தரப்பு செலவுத் தொகை விவரம் | பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகை விவரம் |
|---|---|---|

( இருதரப்பில் செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

| | | |
|---|---|---|
| 1. பிராது ஸ்டாம்ப் | - ரூ. 180.00 | --- |
| 2. வக்காலத்து ஸ்டாம்ப். | - ரூ. 10.00 | --- |
| 3. வழக்கறிஞர் கட்டணம் | - ரூ. 425.00 | --- |
| மொத்தம் | ரூ. 615.00 | |

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

ஒம்/- அ.திரு. அ.செல்வகுமார்,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல
நடுவர், போச்சம்பள்ளி.

**தீர்ப்பாணை**

அசல்வழக்கு எண். 12/2019

நாள்: 06.03.2021